# கோவலன் கண்ணகி தோற்றத் தொன்மங்களும் குடிவழி அடையாளமும்


By

**ஜென்ஸிஸ் குமார், மி.**

*இணைப்பேராசிரியர், பல்கலைக்கழகக் கல்லூரி, திருவனந்தபுரம், கேரளா, இந்தியா.*



**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழகத்தில் நாட்டுக்கோட்டைச் செட்டி, செட்டியார், வாணியன் என்னும் சாதிப் பெயர்களில் அழைக்கப்படும் கூட்டத்தினர் தங்களுக்குள் சமமான சமூகத் தகுதி உடையவர் அல்லர். சாதிய அடுக்கு முறையில் வெவ்வேறு படிநிலைகளில் வைத்து மதிக்கப்படுகின்றனர். ஆனால் இக்கூட்டத்தினர்கள் அனைவரும் தங்களைக் கோவலன் கண்ணகி வழிவந்தவர்கள் என்று கூறிக் கொள்கின்றனர். இவர்களின் கூற்றுப்படி கோவலனும் கண்ணகியும் இவர்களது பொது மூதாதையர் எனலாம். இவர்கள் பல்வேறு உட்சாதிகளாக அடையாளப்படுத்த பெற்றாலும் தங்கள் கால் வழியைக் கோவலன் கண்ணகி வழி அடையாளப்படுத்துவது குறிப்பிடத்தக்கது. ஆனால் இப்படி அடையாளப்படுத்துவதில் இவர்களுக்கிடையே பல்வேறு முரண்பாடுகள் உள்ளன. சான்றாக நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் தாங்கள் மட்டுமே கோவலன் கண்ணகி வழித்தோன்றல்கள் என்றும் ஏனையவர்கள் அவ்வாறு இல்லை என்றும் கூறுகின்றனர். இதனைப் போன்று செட்டியார்கள் தாங்களும் நாட்டுக்கோட்டைச் செட்டிகளும் மட்டுமே கோவலன் கண்ணகி வழி வந்தவர்கள் எனக் கூறுகின்றனர். நாட்டுக்கோட்டைச் செட்டியும் செட்டியார்களும் தங்களைத் தவிர்த்த ஏனைய பிரிவினர்கள் கோவலன் கண்ணகி வழித்தோன்றல்கள் இல்லை என்பதைத் தெளிவுபடுத்துகின்றனர். ஆனால் மற்றொரு பிரிவாகிய வாணியின் என்னும் உட்ச் சாதியினர் தாங்களும் கோவலன் கண்ணகி வழித்தோன்றல்கள்தான் எனக் குறிப்பிடுகின்றனர். இம்மூன்று கூட்டத்தினர்களும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் சிதறிக் காணப்படுகின்றனர். இம்மூன்று உச்சாதிகளுக்குள்ளும் பல்வேறு உட்பிரிவுகளும் உள்ளன. இவர்களுக்குள் மணஉறவுகள் மேற்கொள்ளப்படுவதில்லை. சுருங்கக்கூறின் ஒவ்வொரு சாதியினரும் தங்களைத் தனித்தனி சாதியினராக அடையாளப்படுத்துவதில் முனைப்பாக உள்ளனர். இருப்பினும் இவர்கள் அனைவரும் ஒரே மூதாதையரின் வழித்தோன்றல்களாகத் தங்களை அடையாளப்படுத்துவதால் இவர்கள் அனைவரும் ஒரே கூட்டத்தை சேர்ந்தவர்களாக இருக்கலாம் என கருத வாய்ப்பு உண்டு. ஒவ்வொரு பிரிவினரும் வெவ்வேறு சூழல்களின் காரணமாக வெவ்வேறு இடங்களில் வாழ்ந்தமையாலும் வேறு வேறு சாதிகளோடு தொடர்பு கொண்டமை யாலும் இவர்களுக்குள் அடுக்கு முறையும் குழுத்தூய்மை மனப்போக்கும் உருவாகியிருக்கலாம். இச்சிக்கல்களைத் தெளிவுபடுத்த சாதித் தோற்றக் கதைகளையும் குடிபெயர்ச்சிக் கதைகளையும் ஆய்வுக்கு உட்படுத்துவது இன்றியமையாததாகும்.*



***கலைச்சொற்கள்:*** *குடிப்பெயர்ச்சி, உட்ச்சாதி, அகஅடுக்கு முறை, குழுத்தூய்மை, வம்சாவளியினர், நந்தவனங்கள், இருப்பைத்தோட்டம், செக்கிரை, செக்காரப் பட்டம்.*


**முன்னுரை**

தமிழர்களின் பெருமைக்குரிய நூல்களுள் ஒன்றாகச் சிலப்பதிகாரம் காணப்படுகிறது. தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு அடையாளங்களில் ஒன்றாக இக்காப்பியத்தின் கதை விளங்குகின்றது. இதனால் ஆய்வடங்கல் ஒன்றை உருவாக்கும் அளவுக்கு இக்காப்பியம் குறித்த கட்டுரைகளும் நூல்களும் தொடர்ச்சியாகவெளிவந்து கொண்டிருக்கின்றன. சிலப்பதிகாரம் தொன்மைக்குத் தொன்மையாய் தொடர்ச்சிக்குத் தொடர்ச்சியாய் என்றென்றும் ஆய்வாளர் களுக்குப் புதியனவாய் தோற்றமளித்துக் கொண்டே இருக்கின்றது. சிலப்பதிகாரம் பற்றிய ஆய்வினை ஒரு கால எல்லையோடு முடித்து விட முடியாது என்றென்றும் ஆராயத் தக்கதாகவே தொடர்ந்து கொண்டிருக்கும். பிரெஞ்சு தத்துவவாதி பேகர் சொன்னது போல இலக்கியம் சமூக வயப்படும் போது அது காலத்தின் கண்ணாடியாகி சமூக வரலாற்றுக்கு ஆதாரமாகிறது. இலக்கியம் தனிமனிதரால் படைக்கப்பட்டாலும் சமூகத்தின் கூட்டு மன வெளிப்பாடாகவே அது அமைவதால்

படைக்கப்பட்டப் பின்னர் அது தனி மனிதனைத் தாண்டி சமூகத்திற்கானதாக மாறிவிடுகிறது.

சிலப்பதிகாரத்தின் சமூகப் பின்புலத்தையும் பண்பாட்டுப் பின்புலத்தையும் ஊடறுத்து அதனை ஒரு கருத்து கட்டமைப்பாக நாம் புரிந்து கொள்ள வேண்டியதை இலக்கிய மானிடவியல் வலியுறுத்துகிறது. பழமைச் சமூகங்களின் சமூக அமைப்பையும் பண்பாட்டு முறையையும் விளங்கிக் கொள்வதற்கு மானிடவியல் அணுகுமுறையே சிறந்ததாகும். சிலப்பதிகாரம் தமிழில் முதல் காப்பியம், நெஞ்சைள்ளும் காப்பியம் என்பன போன்ற பல தத்துவங்களைத் தாண்டி இனவரவியல் நோக்கில் பார்க்கும் போது இப்பனுவலுக்கு மேலும் ஒரு தனிச்சிறப்பு உண்டு. இது தமிழர்களின் தொல்குடி முதல் முன்னேறிய வணிகச் சமூகம் வரையிலான பன்முகபட்ட பண்பாட்டு முறைகள், வாழ்வியல் நெறிகள், அரசு முறை, பெண்களின் சமுதாய நிலை, வரலாறு என இன்னும் பல விரிந்துபட்ட வாழ்வியல் முறைகளை எல்லாம் காப்பியத்தின் ஊடாக வண்ணனைப் படுத்துகிறது. அக்காலகட்டத்தின் சமூக பண்பாட்டு முறைகளை எல்லாம் விளக்கக்கூடிய பன்முகப் பனுவலாக சிலப்பதிகாரம் அமைகிறது. இக்கட்டுரையும் சிலப்பதிகாரத்தை மானிடவியல் நோக்கில் அணுகுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. குறிப்பாகக் கோவலன் கண்ணகி தொன்மக்கதைகளைத் தமிழகத்தில் வாழும் நாட்டுக்கோட்டைச் செட்டி, செட்டியார், வாணியன் சாதியினரின் சாதித் தோற்றத் தொன்மக் கதைகளுடன் பொருத்திப் பார்த்து இக்குழுவினர்களுக்கு இடையிலான சமூகத் தகுதியை குடிவழியில் அடையாளப்படுத்துவதை இக்கட்டுரை முதன்மையாகக் கொண்டுள்ளது.

## சாதித் தோற்றக் கதைகள்

தமிழகத்தில் மேற்குறித்த மூன்று பிரிவினர்களின் தோற்றம் குறித்த கதைகள் வாய்மொழி மரபிலும் எழுத்து மரபிலும் காணப்படுகின்றன. இவற்றுள் பல வடிவங்களும் திரிபு வடிவங்களும் அடங்கும்.

## சிலப்பதிகாரக் கதை

கோவலன் கண்ணகி முற்பிறவி வரலாற்றைக் கணவனை இழந்து துயருற்ற கண்ணகிக்கு மதுராபதி தெய்வம் கூறும் கூற்றாக சிலப்பதிகாரம்,

“கடிபொழில் உடுத்த கலிங்க நல் நாட்டு
வடிவேல் தடக்கை வசுவும் குமரனும்
……………………………… –...........
..............................................................
வெந்திறல் வேந்தர்க்குக் கோத்தொழில் செய்வோன்
பரதன் என்னும் பெயரன்அக்கோவலன்
விரதம் நீங்கிய வெறுப்பினன்”

ஆதலின் (சிலம்பு, 2.23.140-170).

எனக் குறிப்பிடுவதாக இளங்கோவடிகள் எடுத்துரைக்கிறார்.

## வைசிய புராணக் கதை

மாசாத்துவானின் குலவழியில் தோன்றிய மணியரசனுக்குப் பிறந்த மூன்று ஆண் மக்களில் மூத்தவன் தானம் செய்து செல்வத்தை இழந்ததால் எண்ணை வாணிபம் செய்து வந்தான். அவன் தினமும் வியாபாரம் செய்த பின் மிஞ்சும் எண்ணெயைக் கொண்டு நரபலி கேட்டதால் பாண்டியனால் பூட்டி வைக்கப் பெற்ற காளி கோவிலில் பூசை செய்து வந்தான். இதனால் சிரச்சேதம் செய்யப்பட்ட அவன் காளியின் வரம் பெற்று, மறுபிறவியில் கோவலனாகவும் காளி கண்ணகியாகவும் பிறந்து பாண்டியனைப் பழி வாங்கினர் (ரகுநாதன், 1984:159-165).

## கோவலன் கதை

காவிரிப்பம்பட்டினத்தில் மாசோட்டான் செட்டி மாநாய்க்கன் செட்டியின் வழி வந்த முத்துச்செட்டி என்பவன் குழந்தைப் பேற்றிற்காக தான தர்மம் செய்தமையால் அவனது நந்தவனத்தில் காமதேனு கன்றோடு வந்து சென்றது. நந்தவனத்தை மாடு அழிப்பதாக எண்ணிய முத்துச்செட்டி கல்லால் அடிக்க கன்று செத்துப் போனதால் குழந்தை வரம் பெற்றாலும் அது பதினாறாவது வயதில் இறக்க நேரிடும் என்னும் சாபத்தை பெற்றான்.

இதனைப் போன்று மணியரசனின் இரண்டாவது மகன் பிள்ளை இல்லாததால் கோபத்தில் பாண்டியனால் மூடப்பட்ட காளிக் கோவிலில் எண்ணை வியாபாரம் செழிப்பதற்காகப் பூசை செய்தான். எனவே பாண்டியனால் அவன் கொல்லப்பட்டதால் அவனது மனைவியும்

உயிர்த்துறக்க பாண்டியனைப் பழிவாங்குவதாக காளியால் வரம் பெற்றாள். இதனை கண்ணுற்ற சொக்கர் ,வாணிபன், அவன் மனைவி, காளி ஆகியோரின் உயிர்களைத் தங்கச்சிமிழில் அடைத்து பாதுகாத்தார். முத்துச் செட்டிக்கு எண்ணெய் வாணிபன் கோவலனாகவும் பாண்டிய மன்னனுக்கு காளி கண்ணகியாகவும் வசந்த மாலைக்கு எண்ணை வாணிபன் மனைவி மாதவியாகவும் சொக்கநாதரால் மறு பிறப்பு அளிக்கப்பெற்றனர்.

கண்ணகியின் பிறப்பால் ஏற்படவிருக்கும் அழிவை ஜோதிடர்களால் உணர்ந்த பாண்டிய மன்னன் அவளைத் தண்ணீரில் விட மாநாய்க்கன் செட்டியால் எடுத்து வளர்க்கப் பெற்றாள். பின்னர் கோவலன் கண்ணகி திருமணம் நடந்தேறியது. மாதவியின் ஆடலில் மயங்கிய கோவலன் அவளோடு சிறிது காலம் வாழ்ந்து பொருள் இழந்து மீண்டும் கண்ணகியைச் சேர்ந்து காற் சிலம்போடு மதுரை செல்லும் போது பொற்கொல்லனால் கள்வன் எனப் பழி சுமத்தப் பெற்றுக் கொல்லப்பட்டான் (புகழேந்தி புலவர்,1973:3- 6).

மேற்சுட்டப் பெற்றுள்ள அச்சில் வெளிவந்துள்ள கோவலன் கண்ணகி கதைகளைத் தவிர வாய்மொழி மரபிலும் அவர்களது முற்பிறவிக் கதை தமிழ்நாட்டிலும் கேரளத்திலும் பலவாறாக வழங்கப்பட்டு வருகிறது. சிலப்பதிகாரக் கதையின் பல்வேறு வடிவங்களை ஆய்வுக்கு உட்படுத்திய ப்ரெண்டா பெக் என்பவர் கோவலனின் முற்பிறவி குறித்து செய்திகள் வைசிய புராணத்திலும் புகழேந்தி புலவரின் கோவலன் கதையிலும் கூறப்பட்டுள்ளது போன்று வாய்மொழி மரபிலும் சொல்லப்படுவதாக கூறுகிறார் (1972:23-38).

மேற்சுட்டப்பட்டுள்ள கதைகள் அனைத்தும் வெவ்வேறு காலகட்டங்களைச் சேர்ந்தவையாக இருந்த போதிலும் எல்லாக் கதைகளிலும் கோவலனும் கண்ணகியுமே இன்றியமையாத கதை மாந்தர்களாக முன்வைக்கப் பெற்றுள்ளனர். கோவலன் கண்ணகி முற்பிறப்பு பற்றிய செய்திகளிலும் கோவலன் கொலையுண்ட நிகழ்வுகளும் சிற்சில மாற்றங்களுடன் காணப்படுகின்றதே தவிர பெரும்பான்மையான கதைகள் ஒரே மாதிரியான செய்திகளைத் தருகின்றன. குறிப்பாக முற்பிறவியைப் பற்றி பேசும் போதே சில வடிவங்களில் பேரளவிலான வேறுபாடுகள் காணப்படுகின்றன. மறுபிறவி பற்றிய நிகழ்வுகள் அதாவது கோவலன் கண்ணகியினுடைய வாழ்க்கை நிகழ்வுகள் பெரும்பாலும் எல்லாக் கதைகளிலும் மாற்றம் இல்லாமல் காணப்படுகின்றன.

மேற்குறித்தக் கருத்துக்களை ஆய்வுக்கு உட்படுத்தும் பொழுது எந்த ஒரு கதையும் செட்டியார்களின் தோற்றத்தைக் குறித்துப் பேசுவதாகத் தெரியவில்லை. எல்லாக் கதைகளும் ஏதேனும் ஒரு பெரு வணிகனின் மாச்சோட்டான் செட்டி, மாநாய்க்கன் செட்டி, முத்துச் செட்டி, மணியரசன் குலவழித் தோன்றல்களை அடிப்படையாகக் கொண்டே அமைகின்றன. இக்குலவழியிலேயே கோவலனும் கண்ணகியும் இணைக்கப் பெற்றுள்ளனர். கதைகள் குறிப்பிடும் குலவழியினர் இருவகையானத் தொழிலை மேற்கொண்டு இருந்தமையை அறிய முடிகின்றது. அவை ஒன்று பொன், முத்து, வாணிபம் மற்றொன்று எண்ணெய் வாணிபம் ஆகும்.

கோவலன் கண்ணகியின் மூதாதையர்களாக மாச் சோட்டான்செட்டி, முத்துச் செட்டி, மணியரசன் ஆகிய நால்வரைக் கதைகள் அடையாளப்படுத்துகின்றன. இந்நால்வரும் பொன், முத்து, வாணிபம் செய்தவர்களாக குறிப்பிடப்படுகின்றனர். இந்நால் வரையும் கோவலன் கண்ணகியின் முற்பிறவியைக் குறித்துப் பேசும்போது மட்டுமே கதைகள் சுட்டிக்காட்டுகின்றன. நாட்டுக்கோட்டைச் செட்டியார்களும், செட்டியார்களும் தங்களது சாதித் தோற்றத்தைப் பற்றி பேசும்போது மேற்குறித்த நால்வரின் வழித்தோன்றல்கள் எனத் தங்களை அடையாளப்படுத்துகின்றனர். இவர்கள் தங்களை கோவலன் கண்ணகியின் வழித்தோன்றல்கள் எனக் குறிப்பிடும் போதும் மாச் சோட்டான் செட்டி, மாநாய்க்கன் செட்டி போன்ற மூதாதையருக்கு அழுத்தம் தருவதைக் காண முடிகிறது. இவர்களைப் பொறுத்தவரையில் கோவலன் கண்ணகி மாச்சோட்டான் செட்டி, மாநாய்கன் செட்டியின் குடும்ப வாரிசுகளே தவிர கோவலனும் கண்ணகியும் மட்டுமே செட்டியார்களை அடையாளப்படுத்தும்

மூதாதையர்கள் அல்ல எனக் கருதுவதாகத் தெரிகிறது. எனவேதான் இவர்கள் கோவலன் முற்பிறவியில் எண்ணை வாணிபம் செய்ததைக் கணக்கில் கொள்ளாமல் மறுபிறவியில் அவன் பொன், முத்து வாணிபம் செய்ததைத் தங்களுக்கு சார்பாக முன்நிறுத்துகின்றனர்.

கோவலன் எண்ணை வாணிபம் செய்தமை பற்றி பேசும்போது அவனது மூதாதையர்கள் பொன், முத்து, வாணிபம் செய்தவர்கள்தான் என்பதற்கு அழுத்தம் தருகின்றனர். சுருங்கக் கூறின் நாட்டுக்கோட்டை செட்டிகளும், செட்டியார்களும் வைசிய புராணம், புகழேந்திப் புலவரின் கோவலன் கதை, பிரண்டா பெக் குறிப்பிடும் கோவலனார் கதை ஆகிய மூன்று வடிவங்களும் கோவலன் முற்பிறவியில் எண்ணை சுமந்து வாணிபம் செய்தான் என்று குறிப்பிடுவதை ஒத்துக்கொள்ளவில்லை என்பதை கள ஆய்வின் மூலம் அறிய முடிகிறது. இதன் மூலம் செட்டியார்களும் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களும் பொன், முத்து, வாணிபம் செய்யும் குல வழித் தோன்றல்களாகத் தங்களை அடையாளப் படுத்துகின்றனர் எனத் தெளியலாம்.

முன்னர் சுட்டிய மூன்று கதை வடிவங்களும் கோவலன் முற்பிறவியில் எண்ணெய் வாணிபம் செய்ததாகக் குறிப்பிடுவதை வாணியர்கள் தங்களது குல மரபுக்கு ஆதாரமாகச் சுட்டுகின்றனர். முன்னர் குறிப்பிட்டபடியே செட்டியார்களுள் பொருளாதார நிலையில் நலிவுற்றவர்கள் எண்ணெய் வாணிபத்தில் ஈடுபடுபவர் எனக் கொள்வதாயின் வாணியர்கள் செட்டியார்களை விட சமூக மதிப்பில் தாழ்ந்தவர்கள் என மதிக்கப்படுவதற்குப் பின்னால் இயங்கும் தர்க்கம் ஏற்புடையதாக அமைகிறது

அக்காலத்தில் கல்செக்குத் தொழில் செய்பவர்களுக்கு இருந்த சமூக மதிப்பு குறித்து தொ. பரமசிவன் அவர்கள் குறிப்பிடுகையில் “பக்தி இயக்கக் காலத்தில் சாதியப் படிநிலைகள் வகுக்கப்பட்ட போது செக்கினைத் தொழிற்கருவியாக கொண்டு எண்ணை எடுக்கும் சாதியினர் கீழ் சாதியினராகக் கருதப்பட்டனர் .எண்ணை அமங்கலப் பொருளாகக் கருதப்பட்டது. எண்ணெய் விற்போர் எதிரில் வருவது நல்ல சகுனமில்லை எனவும் கருதப்பட்டது” (1997:34).

இக்கருத்துகளைக் கொண்டு பார்க்கும் பொழுது வாணியர்கள் எண்ணைத் தொழில் செய்பவர்கள் என்பதால் பொன், முத்து வாணிபம் செய்து வந்த நாட்டுக்கோட்டைச் செட்டியார்களும், செட்டியார்களும் இவர்களைத் தங்களுக்கு சமத் தகுதி உடையவர்களாக ஏற்றுக் கொள்ளவில்லை எனலாம். இதன் வெளிப்பாடு மூன்று பிரிவினரும் தங்கள் முற்பிறவி கதைகளில் வெவ்வேறு குடி வழிகளை அடையாளப்படுத்துவதற்கான காரணமாக அமைகிறது எனலாம். எண்ணை வாணிபம் பொன் ,முத்து போன்று பெரும் வணிகப் பொருள் அன்று. பெரும்பாலும் அது உற்பத்தி செய்யப்படும் இடத்துக்கு அருகிலேயே விற்கப்படும் பொருளாக இருந்தது எனலாம். நாம் முன்னர் குறிப்பிட்ட மூன்று கதைகளுமே கோவலன் முற்பிறவியில் எண்ணை சுமந்து விற்றான் என்ற செய்தியையும் மேற்குறித்த கருத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம் .வீட்டுப் பயன்பாட்டு பொருளாக எண்ணெய் அமைந்திருந்ததால் குடியிருப்புகள் தோறும் அல்லது பல குடியிருப்புகளுக்கு அருகே எண்ணைத் தொழில் செய்யும் சாதியினர் குடியமர்ந்தனர். இவர்களின் தொழில் கருவிகள் அதாவது கல் செக்குகள் ஒன்றுக்கு மேற்பட்ட நான்கு ஐந்து என ஓர் இடத்தில் சேர்ந்தே காணப்பட்டன. இவை அனைத்தும் வணிக வடிகால்களாக இருந்தன என்று தொ. பரமசிவன் நேர்காணலில் பதிவு செய்தார்.

“சோழ பாண்டிய பேரரசர்கள் காலத்தில் எண்ணெய் உற்பத்தி அரசால் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. கல்லினால் ஆன மிக பழைய செக் குகள் எழுத்துக்களோடு கிடைத்துள்ளன. தர்மபுரி மாவட்ட கல்வெட்டு ஒன்றில் இறையமன் இட்ட செக்கு என்ற தொடர் காணப்படுகிறது. மதுரை மாவட்டம் கருங்காலக்குடியில் ஸ்ரீ வழுதி வளநாட்டுமிழலூர் அப்பனுழுஞ்சுரபி நாட்டு நெல்வேளூர்ப் பொற்கொடி வீரர் பேரால் இட்டச்செக்கு என்ற கற்பொறிப்புடன் கூடிய ஒரு செக்கு, கண்டுபிடிக்கப்பட்டு இப்பொழுது மதுரை திருமலை நாயக்கர் மகாலில் வைக்கப்பட்டுள்ளது. இவற்றிலிருந்து அரசியல்

அதிகாரிகளே கல் செக்கு அமைக்கும் உரிமை பெற்றிருந்தனர் எனத் தெரிகிறது. எளிய குடிகள் தம் தேவைக்கு மரச்செக்குகளை பயன்படுத்தி இருக்க வேண்டும். செக்கின் மீது இடப்பட்ட வரி செக்கிரை என்றும் செக்காரப் பட்டம் என்றும் கல்வெட்டுகளில் பலமுறை குறிப்பிடப்படுகிறது என்பார் தொ. பரமசிவன் (1997:34-35).

பரமசிவன் தரும் குறிப்புகள் கல் செக்குத் தொழில் அரசின் கட்டுப்பாட்டில் இருந்தது என்பதை உறுதி செய்கிறது. எண்ணைத் தொழில் செய்பவர்களின் சமூகத் தகுதி பக்தி இயக்க காலகட்டத்திற்கு பின்னர் தாழ்வானதாக மதிக்கப்பட்டது என்பதை அறிய முடிகிறது .பக்தி இயக்க காலத்தில் சாதியப் படிநிலைகள் கடுமையாக வகுக்கப்பட்ட போது செக்கினைத் தொழிற்கருவியாகக் கொண்டு எண்ணை எடுக்கும் சாதியினர் கீழ் சாதியினராகக் கருதப்பட்டனர். 13 ஆம் நூற்றாண்டு வரையிலான கல்வெட்டுக்கள் இவர்களை சக்கர பாடியார், சங்கரபாடியார் என்று குறிப்பிடுகின்றன. கிபி 12-ஆம் நூற்றாண்டில் எழுந்த தாராசுரம் கோயில் சிற்ப வரிசையில் கலிய நாயனார் செக்காட்டும் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. இடைக்காலத்தில் எண்ணை அமங்கலப் பொருளாகக் கருதப்பட்டது. எண்ணை விற்போர் எதிரில் வருவது நல்ல சகுனம் இல்லை எனவும் கருதப்பட்டது. இக்காலத்தில் எண்ணெய் விற்கும் சாதியார் செட்டியார் என்ற சாதிப் பெயரை இட்டுக் கொள்கின்றனர். அக்காலத்தில் அவர்களுக்கு செக்கார் என்றும் பெயர் உண்டு (1997:34).

எண்ணை அமங்கலப் பொருளாகக் கருதப்பட்டமையால் அதனை உற்பத்தி செய்யும் சாதியினரும் சமூகத் தகுதியில் குறைவாகக் கருதப்பட்டனர். இச்செய்திகளைக் கொண்டு பார்க்கும் பொழுது வாணியர்கள் எண்ணைத் தொழில் செய்பவர்கள் என்பதால் பொன் ,முத்து வாணிபம் செய்து வந்த நாட்டுக்கோட்டைச்செட்டிகளும், செட்டியார்களும் இவர்களைத் தங்களுக்கு சமத் தகுதி உடையவர்களாக ஏற்றுக்கொள்ளவில்லை எனலாம். இதன் வெளிப்பாடே இம்மூன்று பிரிவினரும் தங்கள் சாதித் தோற்றக் கதைகளில் வெவ்வேறு குடிவழிகளை அடையாளப்படுத்துவதற்கான காரணமாக அமைகிறது எனலாம்.

## முடிவுரை

இக்கட்டுரை நாட்டுக்கோட்டைச் செட்டியார், செட்டியார், வாணியன் குறித்த தோற்றக் கதைகளை ஆய்வுக்கு உட்படுத்தி உள்ளது. மேற் சொன்ன இம்மூன்று உட்சாதிக் குழுக்களும் வெவ்வேறு சாதிப் புராணங்களையும் குடிபெயர்ச்சிக் கதைகளையும் வழக்கில் கொண்டுள்ளனர். இவர்கள் தங்களைக் கோவலன் கண்ணகியின் வழித்தோன்றல்கள் என குறிப்பிடுகின்றனர். இவ்வாறு தங்களை அடையாளப்படுத்துவதில் அவர்களுக்குள் முரண்பாடுகள் உள்ளன என்பது சுட்டிக்காட்டப்பெற்றது. சான்றாக நாட்டுக்கோட்டைச் செட்டிகள் தாங்கள் மட்டுமே கோவலன் கண்ணகி வழித்தோன்றல்கள் என்றும் ஏனையவர்கள் அவ்வாறு இல்லை என்றும் கூறுகின்றனர். இவர்களைப் போன்று செட்டியார்கள் தாங்களும் நாட்டுக்கோட்டைச் செட்டிகளும் மட்டுமே கோவலன் கண்ணகி வழி வந்தவர்கள் என்று கூறுகின்றனர். மற்றொரு பிரிவாகிய வாணியன் என்னும் உட்சாதியினர் தாங்களும் கோவலன் கண்ணகி வழி வந்தவர்கள் தான் என்று குறிப்பிடுகின்றனர். எனினும் இவர்கள் ஒருவரை ஒருவர் தங்களைச் சமமானவர்களாக ஒத்துக் கொள்ளவில்லை என்பதை அறிய முடிந்தது. இம்மூன்று உட்சாதிகளும் தமிழகத்தில் ஒரே மாதிரியான சமூகத் தகுதி உடையவர்களாக காணப்படவில்லை என்பதையும் அறிய முடிந்தது. எனவே இத்தகவல்கள் சாதித் தோற்றக் கதைகளைக் கொண்டு ஆராயப்பெற்றன. அதாவது சாதித் தோற்றக் கதைகள் கோவலன் கண்ணகியின் மூதாதையர்களாக முற்பிறவியில் மாச்சோட்டான், மாநாய்க்கன், முத்துச் செட்டி, மணியரசன் ஆகிய நால்வரைச் சுட்டிக்காட்டியதை அறிய முடிந்தது. இதில் செட்டியார்களும் நாட்டுக்கோட்டைச் செட்டியும் கோவலன் முற்பிறவியில் எண்ணை வாணிபம் செய்ததைக் கணக்கில் கொள்ளாமல் மறுபிறவியில் அவன் பொன், முத்து வாணிபம் செய்ததைத் தங்களுக்கு சார்பாக முன்னிறுத்துகிறார்கள். கோவலன் முற்பிறவியில் எண்ணை சுமந்து விற்றதாகக் கூறப்படுவதை தங்கள் குல மரபுக்கு ஆதாரமாகச் சுட்டுகின்றனர்.

பொருளாதாரத்தில் நலிவுற்ற செட்டியார்களே எண்ணை வாணிபத்தில் ஈடுபட்டதாகக் கதைகள் குறிப்பிடுகின்றன. இந்த வேறுபாடுகளே இவர்களுக்கு இடையில் காணப்படும் சமூக மதிப்பு வேறுபாடுகளுக்கு அடிப்படை என்பதை இக்கட்டுரை மூலம் உணர முடிந்தது. இவர்கள் குறிப்பிடும் சாதித் தோற்றக் கதைகள் சாதியின் தோற்றத்தைப் பற்றி பேசாமல் அவர்களது சமூக மதிப்பை குறித்துப் பேசுகின்றன. எனவே இக்கதைகளை சாதித் தோற்றக் கதைகள் என்று கருதுவதோடு சமூகத் தகுதியை வெளிப்படுத்தும் கதைகள் என்றும் அடையாளப் படுத்துவது பொருத்தமானதாகும்.

### பார்வை நூல்கள்


இராமநாதன், அ. (தொ.ஆ.), நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு, கமர்சியல் பிரிண்டிங் அன்பப்ளிசிங் ஹவுஸ், சென்னை, தமிழ்நாடு, 1953.

சின்னையச் செட்டியார், (ப.ஆ.), தன வைசியராகிய நாட்டுக்கோட்டை நகரத்தார் சரித்திரம், காசி விஸ்வநாதன் வெளியீடு, தஞ்சை, தமிழ்நாடு, 1941.

நீலகண்ட பிள்ளை, தா., கோட்டார் செட்டியார் வரலாறும் வாழ்வியலும், மகளிர் அச்சகம், நாகர்கோவில், தமிழ்நாடு, 1989.

பரமசிவன், தொ., அறியப்படாத தமிழகம், ஜெயா பதிப்பகம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி, தமிழ்நாடு, 1997.

ரகுநாதன், தொ.மு.சி., இளங்கோவடிகள் யார்?, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, தமிழ்நாடு, 1984.

ஜென்ஸிஸ் குமார், மி., கிறித்தவ வாணிய சமுதாயத்தினரின் இனவரைவியல், (கீழ ஆசாரிப்பள்ளம் - குமரி மாவட்டம்) அச்சிடப்படாத எம்.பில் பட்ட ஆய்வேடு. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு, 2000.


## To cite this article

*****************


Jencis Kumar, M. (2026). கோவலன் கண்ணகி தோற்றத் தொன்மங்களும் குடிவழி அடையாளமும். *Sparkling International Journal of Multidisciplinary Research Studies, 9*(3), 19-24.


*************************************************************************************

## ABOUT THE AUTHOR




***Dr Jencis Kumar M.*** *is an Associate Professor in the Department of Tamil at University College, Palayam, Thiruvananthapuram, Kerala, India. He earned his Ph.D. from Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu, India, with a dissertation titled "Chettiyargalin Kudippearchiyum Chittoor Agamanakkulu Uruvakkamum." He has published 25 research articles in academic journals, including 10 UGC-referred journals. He has also completed one Orientation Program and three Refresher Courses at the Human Resource Development Center (HRDC), Kariavattom, Kerala, India, reflecting his strong academic contributions and professional development.*


*************************************************************************************